No. of Printed Pages : **32**

**3307 (NS)**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## PART - III

# கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

### பகுதி - I / PART - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given four alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

https://www.tamilnaduboard.com

1. நிலையறிக்கை பொதுவாக வியாபாரத்தின் __________ கண்டறிய தயாரிக்கப்படுகிறது.

(அ) இலாபம் அல்லது நட்டம்

(ஆ) நிதிநிலை

(இ) முதல்

(ஈ) கணக்கீட்டு சரித்தன்மை

Statement of affairs is generally prepared to find out the __________ of the business.

(a) Profit or loss

(b) Financial position

(c) Capital

(d) Arithmetical accuracy

2. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு :

(அ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு

(ஆ) சொத்துக் கணக்கு

(இ) பெயரளவு கணக்கு

(ஈ) ஆள்சார் கணக்கு

Income and Expenditure account is a :

(a) Representative Personal Account

(b) Real Account

(c) Nominal Account

(d) Personal Account

https://www.tamilnaduboard.com

3. இறுதிமுதல் + எடுப்புகள் – கூடுதல் முதல் = __________.

(அ) சரிக்கட்டப்பட்ட தொடக்க முதல்

(ஆ) தொடக்க முதல்

(இ) இலாபம் அல்லது நட்டம்

(ஈ) சரிக்கட்டப்பட்ட இறுதி முதல்

Closing Capital + Drawings – Additional Capital = __________.

(a) Adjusted Opening Capital

(b) Opening Capital

(c) Profit or Loss

(d) Adjusted Closing Capital

4. ஒரு மன்றத்தில் உள்ள 500 உறுப்பினர்கள், ஆண்டு சந்தாவாக ₹ 100 செலுத்துகின்றனர். நடப்பாண்டில் கூடியுள்ள சந்தா இன்னமும் பெறப்படாதது ₹ 200. முன் கூட்டிப் பெற்ற சந்தா ₹ 300. வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினை கண்டறியவும்.

(அ) ₹ 49,800 (ஆ) ₹ 50,000

(இ) ₹ 50,200 (ஈ) ₹ 49,900

There are 500 members in a club each paying ₹ 100 as annual subscription. Subscription due but not received for the current year is ₹ 200. Subscription received in advance is ₹ 300. Find out the amount of subscription to be shown in the income and expenditure account.

(a) ₹ 49,800 (b) ₹ 50,000

(c) ₹ 50,200 (d) ₹ 49,900

[ திருப்புக / Turn over

https://www.tamilnaduboard.com

5. கூட்டாளிகளிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது முதல் மீது வட்டி :

(அ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்

(ஆ) வழங்கப்படுவதில்லை

(இ) வங்கி வீதத்தில் வழங்கப்படும்

(ஈ) ஆண்டுக்கு 5% வழங்கப்படும்

In the absence of an agreement among the partners, interest on capital is :

(a) Allowed @ 6% per annum

(b) Not allowed

(c) Allowed at bank rate

(d) Allowed @ 5% per annum

6. வேறுபட்ட ஒன்றை தேர்ந்தெடுக்கவும் :

(அ) நிலை முதல் முறை

(ஆ) சராசரி இலாப முறை

(இ) உயர் இலாப முறை

(ஈ) மூலதனமாக்கல் முறை

Select the odd one out :

(a) Fixed capital method

(b) Average profit method

(c) Super profit method

(d) Capitalisation method

https://www.tamilnaduboard.com

7. நிலை முதல் முறையில் கூட்டாளிகளுக்குரிய ஊதியம், கழிவு, முதல் மீது வட்டி போன்றவை வரவு வைக்கப்படும் கணக்கு :

(அ) எடுப்புக் கணக்கு (ஆ) முதல் கணக்கு

(இ) நடப்புக் கணக்கு (ஈ) கடன் கணக்கு

Under fixed capital method, partners' salary, commission and interest on capital will be credited in :

(a) Drawings Account (b) Capital Account

(c) Current Account (d) Loan Account

8. கூட்டாளியின் புதிய இலாபப் பகிர்வை விட பழைய இலாபப் பகிர்வு அதிகமாக இருந்தால் அவ்வேறுபாடு அழைக்கப்படுவது :

(அ) கரைப்பு விகிதம் (ஆ) முதல் விகிதம்

(இ) தியாக விகிதம் (ஈ) ஆதாய விகிதம்

If the old profit sharing ratio is more than the new profit sharing ratio of a partner, the difference is called :

(a) Solvency ratio (b) Capital ratio

(c) Sacrificing ratio (d) Gaining ratio

9. சொத்துக்களை வாங்க பங்குகள் வெளியிடும் போது, வரவு வைக்கப்படும் கணக்கு :

(அ) வங்கிக் கணக்கு (ஆ) விற்பனையாளர் கணக்கு

(இ) பற்பல சொத்துக்கள் கணக்கு (ஈ) பங்கு முதல் கணக்கு

When shares are issued for purchase of assets, the amount should be credited to :

(a) Bank Account (b) Vendors Account

(c) Sundry Assets Account (d) Share Capital Account



https://www.tamilnaduboard.com

**10.** நிறுமக் கலைப்பின் போது மட்டுமே அழைக்கப்படக்கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும் :

(அ) காப்பு முதல் (ஆ) அங்கீகரிக்கப்பட்ட முதல்

(இ) அழைக்கப்பட்ட முதல் (ஈ) முதலினக் காப்பு

That part of share capital which can be called up only on the winding up of a company is called :

(a) Reserve capital (b) Authorised capital

(c) Called up capital (d) Capital reserve

**11.** X, Y மற்றும் Z என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 2019 ஏப்ரல் 1 அன்று X இறந்து விட்டார். 2018 -ல் இலாபம் ₹ 36,000 என்ற அடிப்படையில் 2019 -ம் ஆண்டுக்குரிய இலாபத்தில் X -ன் பங்கினைக் கண்டறியவும்.

(அ) ₹ 36,000 (ஆ) ₹ 1,000 (இ) ₹ 3,000 (ஈ) ₹ 12,000

X, Y and Z were partners sharing profits and losses equally. X died on 1st April 2019. Find out the share of X in the profit of 2019 based on the profit of 2018 which showed ₹ 36,000.

(a) ₹ 36,000 (b) ₹ 1,000 (c) ₹ 3,000 (d) ₹ 12,000

**12.** நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது :

(அ) நீண்ட கால தகவல்கள் (ஆ) பணம் சாரா தகவல்கள்

(இ) கடந்த கால தகவல்கள் (ஈ) குறுகிய கால தகவல்கள்

The financial statements do not exhibit :

(a) Long-term data (b) Non-monetary data

(c) Past data (d) Short-term data

https://www.tamilnaduboard.com

**13.** சரியான குறியீட்டைப் பயன்படுத்தி பொருத்தமான இணையைத் தேர்ந்தெடுக்கவும் :

| | | | |
|---|---|---|---|
| (1) | குறை ஒப்பம் | (i) | முன் கூட்டி செலுத்திய அழைப்புப் பணம் |
| (2) | மிகை ஒப்பம் | (ii) | வெளியிட்ட பங்குகளை விட அதிகமாக ஒப்பப்பட்டது |
| (3) | அழைப்பு நிலுவை | (iii) | வெளியிட்ட பங்குகளை விட குறைவாக ஒப்பப்பட்டது |
| (4) | அழைப்பு முன்பணம் | (iv) | செலுத்தப் பெறாத அழைப்புப் பணம் |

(அ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

(ஆ) (1) - (i), (2) - (ii), (3) - (iii), (4) - (iv)

(இ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(ஈ) (1) - (iii), (2) - (ii), (3) - (iv), (4) - (i)

Match the following :

| | | | |
|---|---|---|---|
| (1) | Under subscription | (i) | Amount prepaid for calls |
| (2) | Over subscription | (ii) | Subscription above the offered shares |
| (3) | Calls in arrear | (iii) | Subscription below the offered shares |
| (4) | Calls in advance | (iv) | Amount unpaid on calls |

(a) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

(b) (1) - (i), (2) - (ii), (3) - (iii), (4) - (iv)

(c) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(d) (1) - (iii), (2) - (ii), (3) - (iv), (4) - (i)

**14.** ஓராண்டிற்குள் அல்லது ஒரு இயக்கச் சுழற்சியின் காலத்திற்குள் ரொக்கமாக மாற்றப்பட வேண்டிய சொத்துக்கள் __________.

(அ) புலனாகும் சொத்துக்கள் (ஆ) நிலைச் சொத்துக்கள்

(இ) நடப்புச் சொத்துக்கள் (ஈ) புலனாகா சொத்துக்கள்

Assets that can be converted into cash within a year or within the period of an operating cycle is __________.

(a) Tangible assets (b) Fixed assets

(c) Current assets (d) Intangible assets

[ திருப்புக / Turn over

https://www.tamilnaduboard.com

15. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (1) | நடப்பு விகிதம் | (i) | நீர்மைத் தன்மை |
| (2) | நிகர லாப விகிதம் | (ii) | செயல்திறன் |
| (3) | புற அகப் பொறுப்புகள் விகிதம் | (iii) | நீண்டகால கடன் தீர்க்கும் திறன் |
| (4) | சரக்கிருப்பு சுழற்சி விகிதம் | (iv) | இலாபத் தன்மை |

(அ) (1) - (i), (2) - (ii), (3) - (iii), (4) - (iv)

(ஆ) (1) - (i), (2) - (iv), (3) - (iii), (4) - (ii)

(இ) (1) - (iii), (2) - (ii), (3) - (iv), (4) - (i)

(ஈ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

Match the following :

| | | | |
|---|---|---|---|
| (1) | Current ratio | (i) | Liquidity |
| (2) | Net profit ratio | (ii) | Efficiency |
| (3) | Debt-equity ratio | (iii) | Long-term solvency |
| (4) | Inventory turnover ratio | (iv) | Profitability |

(a) (1) - (i), (2) - (ii), (3) - (iii), (4) - (iv)

(b) (1) - (i), (2) - (iv), (3) - (iii), (4) - (ii)

(c) (1) - (iii), (2) - (ii), (3) - (iv), (4) - (i)

(d) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

16. அறைகலன் கடனுக்கு வாங்கியது Tally -ல் எந்த வகை சான்றாவணத்தில் பதியப்படும் ?

(அ) செலுத்தல்கள் சான்றாவணம்

(ஆ) பெறுதல்கள் சான்றாவணம்

(இ) உரிய குறிப்பேடு சான்றாவணம்

(ஈ) கொள்முதல் சான்றாவணம்

In which type of voucher, credit purchase of furniture is recorded in Tally ?

(a) Payment Voucher

(b) Receipt Voucher

(c) Journal Voucher

(d) Purchase Voucher

https://www.tamilnaduboard.com

**17.** பொருந்தாத இணையினை அடையாளம் காணவும் :

| | | | |
|---|---|---|---|
| (அ) | ஆண்டுத் தொகை முறையில் நற்பெயர் | = | சராசரி இலாபம் × ஆண்டுத் தொகை காரணியின் தற்போதைய மதிப்பு |
| (ஆ) | சராசரி இலாப முறையில் நற்பெயர் | = | சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை |
| (இ) | உயர் இலாப முறையில் நற்பெயர் | = | உயர் இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை |
| (ஈ) | கூட்டு சராசரி இலாப முறையில் நற்பெயர் | = | கூட்டு சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை |

Identify the incorrect pair :

| | | | |
|---|---|---|---|
| (a) | Goodwill under annuity method | = | Average profit × Present value annuity factor |
| (b) | Goodwill under average profit method | = | Average profit × Number of years of purchase |
| (c) | Goodwill under super profit method | = | Super profit × Number of years of purchase |
| (d) | Goodwill under weighted average profit method | = | Weighted average profit × Number of years of purchase |

**18.** Tally -ன் நுழைவாயிலிலிருந்து இருப்பாய்வை பார்வையிட எந்த விருப்பத் தேர்வு பயன்படும் ?

(அ) Gateway of Tally → Display → Trial Balance

(ஆ) Gateway of Tally → Reports → Trial Balance

(இ) Gateway of Tally → Trial Balance

(ஈ) Gateway of Tally → Reports → Display → Trial Balance

Which of the following options is used to view Trial Balance from Gateway of Tally ?

(a) Gateway of Tally → Display → Trial Balance
(b) Gateway of Tally → Reports → Trial Balance
(c) Gateway of Tally → Trial Balance
(d) Gateway of Tally → Reports → Display → Trial Balance



https://www.tamilnaduboard.com

19. கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி விலகலின் போது பகிர்ந்து தராத இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூட்டாளிகளுக்கு இந்த அடிப்படையில் பகிரப்படுகிறது :

(அ) தியாக விகிதம்

(ஆ) புதிய இலாபப் பகிர்வு விகிதம்

(இ) ஆதாய விகிதம்

(ஈ) பழைய இலாபப் பகிர்வு விகிதம்

On retirement of a partner from a partnership firm, accumulated profits and losses are distributed to the partners in the :

(a) Sacrificing ratio

(b) New profit sharing ratio

(c) Gaining ratio

(d) Old profit sharing ratio

20. ஒரு வணிகத்தின் முதலாம் ஆண்டுச் செலவுகள் ₹ 80,000. இரண்டாம் ஆண்டின் செலவுகள் ₹ 88,000 ஆக அதிகரித்திருந்தது. இரண்டாம் ஆண்டின் போக்கு விகிதம் என்ன ?

(அ) 11% (ஆ) 10% (இ) 110% (ஈ) 90%

Expenses for a business for the first year were ₹ 80,000. In the second year, it was increased to ₹ 88,000. What is the trend percentage in the second year ?

(a) 11% (b) 10% (c) 110% (d) 90%

## பகுதி - II/PART - II

குறிப்பு : **எவையேனும்** 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

**Note :** Answer **any seven** questions. Question No. **30** is **compulsory.**

21. சிறிய அளவிலான, தனியாள் வணிகம் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களுக்குப் பொருந்தக் கூடிய கணக்குப் பதிவு முறை எது ? விளக்குக.

Which accounting system may be suitable for small sized sole traders and partnership firms ? Explain.

https://www.tamilnaduboard.com

**22.** இலாப நோக்கற்ற அமைப்பின் வருவாயின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.

Give four examples for revenue receipts of Not-for-Profit organisation.

**23.** மணி என்ற கூட்டாளி 2018, செப்டம்பர் 1 அன்று ₹ 30,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% எனக் கணக்கிடப்பட வேண்டும். 2018, டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிட்டு, மாறுபடும் முதல் முறை எனக் கொண்டு அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

Mani is a partner, who withdrew ₹ 30,000 on 1$^{st}$ September, 2018. Interest on drawings is charged at 6% per annum. Calculate interest on drawings on 31$^{st}$ December, 2018 and show the journal entries by assuming that fluctuating capital method is followed.

**24.** தன்னுருவாக்க நற்பெயர் என்றால் என்ன ?

What is self-generated Goodwill ?

**25.** பின்வரும் விவரங்களிலிருந்து சராசரி இலாபம் கணக்கிடவும்.

2016 : ₹ 8,000    2017 : ₹ 10,000    2018 : ₹ 9,000

Compute average profit from the following information.

2016 : ₹ 8,000    2017 : ₹ 10,000    2018 : ₹ 9,000

**26.** அன்பு மற்றும் இராஜு என்ற இரு கூட்டாளிகள் 3 : 2 என்ற இலாப விகிதத்தில் இலாபத்தை பகிர்ந்து வந்தனர். அக்ஷய் என்பவரை கூட்டாளியாகச் சேர்த்தனர். அன்பு, இராஜு மற்றும் அக்ஷய் அவர்களின் புதிய இலாபப் பங்கு 5 : 3 : 2. தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.

Anbu and Raju are partners, sharing profits in the ratio of 3 : 2. Akshai is admitted as a partner. The new profit sharing ratio among Anbu, Raju and Akshai is 5 : 3 : 2. Find out the sacrificing ratio.



https://www.tamilnaduboard.com

27. பின்வரும் விவரங்களைக் கொண்டு, ஆண்டுத் தொகை முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(i) சராசரி இலாபம் ₹ 14,000

(ii) சாதாரண இலாபம் ₹ 4,000

(iii) சாதாரண இலாப விகிதம் 15%

(iv) நற்பெயருக்கான கொள்முதல் ஆண்டுகள் 5

5 ஆண்டுகளில் ஆண்டுக்கு 15% என்ற வட்டி விகிதத்தில் ₹ 1 -ன் தற்போதைய ஆண்டுத்தொகை மதிப்பு 3.352.

From the following information, calculate the value of goodwill under annuity method :

(i) Average profit ₹ 14,000

(ii) Normal profit ₹ 4,000

(iii) Normal rate of return 15%

(iv) Years of purchase of goodwill 5

Present value of ₹ 1 for 5 years at 15% per annum as per the annuity table is 3.352.

28. சாரா நிறுமம் பங்கொன்று ₹ 10 வீதம் 10,000 நேர்மைப் பங்குகளை ₹ 2 முனைமத்தில், விண்ணப்பத்தின் போது முழுத்தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

Sara Company issues 10,000 equity shares of ₹ 10 at a premium of ₹ 2 each payable fully on application. Pass journal entries.

29. Tally.ERP 9 -ல் ஏதேனும் ஐந்து கணக்கியல் அறிக்கைகள் கூறுக.

State any five accounting reports in Tally.ERP 9.

30. நீர்மைத் தன்மை என்பது என்ன ? நீர்மைத் தன்மை விகிதங்களின் வகைகளைக் குறிப்பிடுக.

What is liquidity ? What are the types of liquidity ratios ?

https://www.tamilnaduboard.com

## பகுதி - III /PART - III

குறிப்பு : **எவையேனும் 7** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். 7x3=21

**Note :** Answer **any seven** questions. Question No. **40** is **compulsory**.

**31.** பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் கண்டறியவும் :

| விவரம் | ₹ |
|---|---|
| 2018 டிசம்பர் 31 அன்று முதல் | 35,000 |
| 2018 ஜனவரி 1 அன்று முதல் | 27,500 |
| உரிமையாளர் தன் சொந்த பயனுக்கு சரக்கு எடுத்தது | ? |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 2,500 |
| அவ்வாண்டின் இலாபம் | 10,000 |

From the following details, calculate the missing figure :

| Particulars | ₹ |
|---|---|
| Capital as on 31st December 2018 | 35,000 |
| Capital as on 1st January 2018 | 27,500 |
| Goods taken for the personal use of the proprietor | ? |
| Additional Capital introduced during the year | 2,500 |
| Profit for the year | 10,000 |

**32.** பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கொள்முதலைக் கணக்கிடவும் :

| | ₹ |
|---|---|
| 2018 ஜனவரி 1 அன்று பற்பல கடனீந்தோர் | 30,000 |
| கடனீந்தோருக்கு ரொக்கம் செலுத்தியது | 1,20,000 |
| கொள்முதல் திருப்பம் | 15,000 |
| ரொக்கக் கொள்முதல் | 2,25,000 |
| 31.12.2018 அன்று கடனீந்தோர் | 25,000 |

From the following particulars, calculate total purchases :

| | ₹ |
|---|---|
| Sundry creditors on 1st January 2018 | 30,000 |
| Paid cash to creditors | 1,20,000 |
| Purchases returns | 15,000 |
| Cash purchases | 2,25,000 |
| Creditors on 31st December 2018 | 25,000 |

[ திருப்புக / Turn over

https://www.tamilnaduboard.com

**33.** சேலம் விளையாட்டு மன்றத்தின் 2019 ஏப்ரல் 1 அன்றைய முதல் நிதியைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| விளையாட்டு உபகரணங்கள் | 30,000 | பரிசு நிதி | 10,000 |
| கணிப்பொறி | 25,000 | பரிசு நிதி முதலீடுகள் | 10,000 |
| 2018 - 2019 -ஆம் ஆண்டில் சந்தா பெற வேண்டியது | 5,000 | கை ரொக்கம் | 7,000 |
| 2019 - 2020 -ஆம் ஆண்டிற்காக முன்கூட்டிப் பெற்ற சந்தா | 8,000 | வங்கி ரொக்கம் | 21,000 |

Compute Capital Fund of Salem Sports Club as on 1.4.2019.

| Particulars | ₹ | Particulars | ₹ |
|---|---|---|---|
| Sports equipment | 30,000 | Prize fund | 10,000 |
| Computer | 25,000 | Prize Fund Investments | 10,000 |
| Subscription outstanding for 2018-19 | 5,000 | Cash in Hand | 7,000 |
| Subscription received in advance for 2019-20 | 8,000 | Cash at Bank | 21,000 |

**34.** நிலை முதல் முறைக்கும், மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.

State the differences between fixed capital method and fluctuating capital method.

https://www.tamilnaduboard.com

**35.** ஒரு கூட்டாண்மை நிறுவனம் கடந்த மூன்று வருடங்களாக ஈட்டிய நிகர லாபங்கள் பின்வருமாறு :

2016 : ₹ 20,000, 2017 : ₹ 17,000, 2018 : ₹ 23,000.

மேற்குறிப்பிட்ட காலம் முழுவதும், நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்ட முதல் ₹ 80,000. நிறுவனம் கொண்டுள்ள இடரினைக் கருத்தில் கொண்டு, பயன்படுத்தப்-பட்ட முதல் மீதான சாதாரண இலாப வீதம் 15% எனக் கருதப்பட்டது. உயர் இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

A partnership firm earned net profits during the last three years as follows :

2016 : ₹ 20,000, 2017 : ₹ 17,000 and 2018 : ₹ 23,000.

The capital investment of the firm throughout the above mentioned period has been ₹ 80,000. Having regard to the risk involved, 15% is considered to be a fair return on capital employed in the business. Calculate the value of goodwill on the basis of 2 years purchase of super profit.

**36.** சீனு மற்றும் சிவா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5 : 3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். சுப்பு என்பவரை புதிய கூட்டாளியாக சேர்க்கும் போது, அவர்கள் பின்வரும் முடிவுகள் எடுத்தனர்.

(i) கட்டிடம் மதிப்பினை ₹ 70,000 ஆக உயர்த்த வேண்டும்.

(ii) கணக்கேடுகளில் இதுவரை பதியப்படாத ₹ 20,000 மதிப்புள்ள முதலீடுகளை கணக்கில் கொண்டு வர வேண்டும்.

(iii) இயந்திரம் மதிப்பு ₹ 14,000 மற்றும் அறைகலன் மதிப்பு ₹ 12,000 குறைக்க வேண்டும்.

(iv) பற்பல கடனீந்தோரில் ₹ 16,000 போக்கெழுத வேண்டும்.

மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயார் செய்யவும்.

Seenu and Siva are partners sharing profits and losses in the ratio of 5 : 3. In view of Subbu's admission, they decided :

(i) To increase the value of building by ₹ 70,000.

(ii) To bring into record investments at ₹ 20,000, which have not so far been brought into account.

(iii) To decrease the value of machinery by ₹ 14,000 and furniture by ₹ 12,000.

(iv) To write off sundry creditors by ₹ 16,000.

Prepare Revaluation account.

[ திருப்புக / Turn over

https://www.tamilnaduboard.com

37. பின்வரும் விவரங்களிலிருந்து மேரி வரையறு நிறுமத்தின் ஒப்பீட்டு வருமான அறிக்கையை தயார் செய்யவும்.

| விவரம் | 2015-16 | 2016-17 |
|---|---|---|
| | ₹ | ₹ |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 4,00,000 | 5,00,000 |
| இயக்கச் செலவுகள் | 2,00,000 | 1,80,000 |
| வருமான வரி (வரிக்கு முன் இலாபத்தில் சதவீதம்) | 20% | 50% |

From the following particulars, prepare comparative income statement of Mary Co. Ltd.

| Particulars | 2015-16 | 2016-17 |
|---|---|---|
| | ₹ | ₹ |
| Revenue from operations | 4,00,000 | 5,00,000 |
| Operating expenses | 2,00,000 | 1,80,000 |
| Income tax (profit before tax in percentage) | 20% | 50% |

38. பின்வரும் தகவல்களிலிருந்து மொத்த இலாப விகிதம் கணக்கிடவும். விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹ 2,50,000. விற்பனையிலிருந்து பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை ₹ 2,10,000 மற்றும் கொள்முதல் ₹ 1,80,000.

Calculate Gross Profit Ratio from the following :

Revenue from operations ₹ 2,50,000, cost of revenue from operations ₹ 2,10,000 and purchases ₹ 1,80,000.

39. Tally.ERP 9 -ல், முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடுகள் யாவை ?

What are the pre-defined ledgers available in Tally.ERP 9 ?

https://www.tamilnaduboard.com

**40.** அருணா ஆலைகள் வரையறு நிறுமத்தின் பதிவு செய்யப்பட்ட பங்குமுதல் ₹ 5,00,000. அதில் 40,000 பங்குகளை ₹ 10 வீதம் பின்வருமாறு செலுத்தத்தக்க வகையில் வெளியிட்டது. விண்ணப்பத்தின் மீது ₹ 3, ஒதுக்கீட்டின் மீது ₹ 5, முதல் மற்றும் இறுதி அழைப்பின் மீது ₹ 2. வெளியிட்ட பங்குகள் அனைத்தும் ஒப்பப்பட்டன. அனைத்துத் தொகைகளும் பெறப்பட்டன. ஆனால் ஒரு பங்குதாரர், தான் வைத்துள்ள 1000 பங்குகளுக்கான முதல் மற்றும் இறுதி அழைப்புத் தொகைகளை ஒதுக்கீட்டின் போதே செலுத்தி விட்டார். ஒதுக்கீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

Aruna Mills Ltd. with a registered capital of ₹ 5,00,000 in equity shares of ₹ 10 each, issued 40,000 of such shares payable as follows :

₹ 3 per share on application, ₹ 5 per share on allotment and ₹ 2 per share on first and final call. The issue was duly subscribed. All the money payable was duly received. But one share holder holding 1000 shares paid the first and final call money on allotment itself.

Give journal entries for allotment.

## பகுதி - IV/PART - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**Note :** Answer **all** the questions.

**41.** (அ) ஆனந்த் தன் கணக்கேடுகளை இரட்டைப் பதிவு முறையில் பராமரித்து வருவதில்லை. 2019 மார்ச் 31 -ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| விவரம் | 31.3.2018<br>₹ | 31.3.2019<br>₹ |
|---|---|---|
| வங்கி ரொக்கம் | 5,000 (ப) | 60,000 (வ) |
| கை ரொக்கம் | 3,000 | 4,500 |
| சரக்கிருப்பு | 35,000 | 45,000 |
| பற்பல கடனாளிகள் | 1,00,000 | 90,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 80,000 | 80,000 |
| நிலம் மற்றும் கட்டிடம் | 1,40,000 | 1,40,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,70,000 | 1,30,000 |

ஆனந்த் தனது சொந்த பயனுக்காக ₹ 60,000 எடுத்துக் கொண்டார். அவர் தன்னுடைய வியாபாரத்தை விரிவுப்படுத்துவதற்காக ₹ 17,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். கடனாளிகள் மீது 5% ஒதுக்கு உருவாக்கவும். பொறி மற்றும் இயந்திரம் மீது 10% தேய்மானம் நீக்கவும்.

**அல்லது**



https://www.tamilnaduboard.com

(ஆ) சென்னை விளையாட்டு மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2018, மார்ச் 31 -ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | | ₹ |
|---|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு (1.4.2017) | 10,000 | சந்தா பெற்றது | | |
| தொடக்க வங்கியிருப்பு (1.4.2017) | 15,000 | 2016 - 17 | 4,500 | |
| வட்டி செலுத்தியது | 5,000 | 2017 - 18 | 65,000 | |
| தொலைபேசி செலவுகள் | 7,000 | 2018 - 19 | 5,000 | 74,500 |
| மைதானம் பராமரித்தது | 22,500 | தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | | 12,500 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் பெற்றது | 5,500 | | | |
| மட்டைகள் மற்றும் பந்துகள் வாங்கியது | 13,000 | தொடர் விளையாட்டுப் போட்டி நிதி வரவுகள் | | 15,000 |
| | | இறுதி ரொக்க இருப்பு (31.3.2018) | | 5,000 |

(a) Ananth does not keep his books under double entry system. Find the profit or loss made by him for the year ending 31st March 2019.

| Particulars | 31.3.2018 ₹ | 31.3.2019 ₹ |
|---|---|---|
| Cash at Bank | 5,000 (Dr) | 60,000 (Cr) |
| Cash in Hand | 3,000 | 4,500 |
| Stock of Goods | 35,000 | 45,000 |
| Sundry Debtors | 1,00,000 | 90,000 |
| Plant and Machinery | 80,000 | 80,000 |
| Land and Building | 1,40,000 | 1,40,000 |
| Sundry Creditors | 1,70,000 | 1,30,000 |

Ananth had withdrawn ₹ 60,000 for his personal use. He had introduced ₹ 17,000 as capital for expansion of his business. Create a provision of 5% on Debtors. Plant and Machinery is to be depreciated at 10%.

OR

https://www.tamilnaduboard.com

(b) From the following particulars of Chennai Sports Club, prepare Receipts and Payments account for the year ended 31st March 2018.

| Particulars | ₹ | Particulars | | ₹ |
|---|---|---|---|---|
| Opening cash balance as on 1.4.2017 | 10,000 | Subscriptions received | | |
| Opening bank balance as on 1.4.2017 | 15,000 | 2016 - 17 | 4,500 | |
| Interest paid | 5,000 | 2017 - 18 | 65,000 | |
| Telephone expenses | 7,000 | 2018 - 19 | 5,000 | 74,500 |
| Upkeep of grounds | 22,500 | Tournament expenses | | 12,500 |
| Life membership fees received | 5,500 | Tournament fund receipts | | 15,000 |
| Bats and balls purchased | 13,000 | Closing balance of cash (31.3.2018) | | 5,000 |

42. (அ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையைக் கணக்கிடவும் :

| விவரம் | ₹ |
|---|---|
| 2017 ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 1,50,000 |
| 2017 ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 40,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 3,90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுக்குரிய ரொக்கம் பெற்றது | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 10,000 |
| விற்பனைத் திருப்பம் | 40,000 |
| 2018 மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 30,000 |
| 2018 மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள் | 1,30,000 |
| ரொக்க விற்பனை | 2,00,000 |

அல்லது



https://www.tamilnaduboard.com

(ஆ) இலக்குமி நிறுமத்தின் 2019, மார்ச் 31 -ம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு :

| விவரம் | ₹ |
|---|---|
| I. **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | |
| 1. **பங்குதாரர் நிதி** | |
| நேர்மைப் பங்கு முதல் | 4,00,000 |
| 2. **நீண்டகாலப் பொறுப்புகள்** | |
| நீண்டகாலக் கடன்கள் | 2,00,000 |
| 3. **நடப்புப் பொறுப்புகள்** | |
| (அ) குறுகிய காலக் கடன்கள் | 50,000 |
| (ஆ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவை | 3,10,000 |
| (இ) இதர நடப்புப் பொறுப்புகள் கொடுபட வேண்டிய செலவுகள் | 15,000 |
| (ஈ) குறுகிய கால ஒதுக்குகள் | 25,000 |
| **மொத்தம்** | 10,00,000 |
| II. **சொத்துக்கள்** | |
| 1. **நீண்ட காலச் சொத்துக்கள்** | |
| (அ) நிலைச் சொத்துக்கள் புலனாகும் சொத்துக்கள் | 4,00,000 |
| 2. **நடப்புச் சொத்துக்கள்** | |
| (அ) சரக்கிருப்பு | 1,60,000 |
| (ஆ) வணிகக் கடனாளிகள் | 3,20,000 |
| (இ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் | 80,000 |
| (ஈ) இதர நடப்புச் சொத்துக்கள் முன் கூட்டிச் செலுத்திய செலவுகள் | 40,000 |
| **மொத்தம்** | 10,00,000 |

(i) நடப்பு விகிதம் (ii) விரைவு விகிதம் கணக்கிடவும்.

https://www.tamilnaduboard.com

(a) From the following particulars, calculate total sales.

| Particulars | ₹ |
|---|---|
| Debtors on 1st April 2017 | 1,50,000 |
| Bills receivable on 1st April 2017 | 40,000 |
| Cash received from Debtors | 3,90,000 |
| Cash received for bills receivable | 90,000 |
| Bills receivable dishonoured | 10,000 |
| Sales return | 40,000 |
| Bills receivable on 31st March 2018 | 30,000 |
| Sundry Debtors on 31st March 2018 | 1,30,000 |
| Cash sales | 2,00,000 |

**OR**

(b) Following is the balance sheet of Lakshmi Ltd. as on 31st March 2019 :

| Particulars | ₹ |
|---|---|
| I. **Equity and Liabilities** | |
| 1. **Shareholder's funds** | |
| Equity share capital | 4,00,000 |
| 2. **Non-current liabilities** | |
| Long-term borrowings | 2,00,000 |
| 3. **Current liabilities** | |
| (a) Short-term borrowings | 50,000 |
| (b) Trade payables | 3,10,000 |
| (c) Other current liabilities | |
| Expenses payable | 15,000 |
| (d) Short-term provisions | 25,000 |
| **Total** | 10,00,000 |
| II. **Assets** | |
| 1. **Non-current assets** | |
| (a) Fixed assets | |
| Tangible assets | 4,00,000 |
| 2. **Current assets** | |
| (a) Inventories | 1,60,000 |
| (b) Trade debtors | 3,20,000 |
| (c) Cash and cash equivalents | 80,000 |
| (d) Other current assets | |
| Prepaid expenses | 40,000 |
| **Total** | 10,00,000 |

**Calculate :** (i) Current ratio (ii) Quick ratio

[ திருப்புக / Turn over

https://www.tamilnaduboard.com

**43.** (அ) டில்லி இலக்கிய மன்றத்தின் 2019 மார்ச் 31 -ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு பின்வருமாறு :

டில்லி இலக்கிய மன்றம்

2019 மார்ச் 31 -ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு

| பெறுதல்கள் | ₹ | செலுத்தல்கள் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | வாடகையும் வீதமும் | 21,000 |
| கை ரொக்கம் | 3,200 | விரிவுரை கட்டணம் | 4,500 |
| நுழைவுக் கட்டணம் | 2,300 | பல்வகைச் செலவுகள் | 7,200 |
| சந்தா | 46,000 | நிலை வைப்பு | 40,000 |
| | | இருப்பு கீ/இ | |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | 2,500 | கை ரொக்கம் | 4,300 |
| நிலை வைப்பின் மீதான | | | |
| வட்டி பெற்றது | 500 | | |
| அறைகலன் விற்றது (1.4.2018) | 22,500 | | |
| (ஏட்டு மதிப்பு ₹ 25,000) | | | |
| | 77,000 | | 77,000 |

**கூடுதல் தகவல்கள் :**

(i) 2018, ஏப்ரல் 1 அன்று முதல்நிதி ₹ 63,200.

(ii) ஆண்டுத் தொடக்கத்தில் மன்றத்தில் இருந்த நூல்களின் மதிப்பு ₹ 20,000 மற்றும் அறைகலன் மதிப்பு ₹ 40,000.

(iii) நடப்பாண்டில் முன் கூட்டிப் பெற்ற சந்தா ₹ 1,000.

சங்கத்தின் 2019, மார்ச் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கையும் அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

**அல்லது**

https://www.tamilnaduboard.com

(ஆ) பின்வரும் விவரங்களைக் கொண்டு சிவா வரையறு நிறுமத்தின் மார்ச் 31, 2016 மற்றும் மார்ச் 31, 2017 -க்கான பொது அளவு வருவாய் அறிக்கையினை தயார் செய்யவும்.

| விவரம் | 2015-16 | 2016-17 |
|---|---|---|
| | ₹ | ₹ |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 2,00,000 | 3,00,000 |
| இதர வருமானம் | 25,000 | 75,000 |
| செலவுகள் | 2,50,000 | 1,50,000 |
| வருமான வரி | 40% | 40% |

(a) The following is the summary of cash transactions of Delhi Literary Club for the year ending 31st March 2019.

Delhi Literary Club

Receipts and Payments Account for the year ending 31st March 2019

| Receipts | ₹ | Payments | ₹ |
|---|---|---|---|
| To Balance b/d | | By Rent and Rates | 21,000 |
| Cash in hand | 3,200 | By Lecture fees | 4,500 |
| To Entrance fees | 2,300 | By Sundry Expenses | 7,200 |
| To Subscriptions | 46,000 | By Fixed Deposit | 40,000 |
| To Life membership fees | 2,500 | By Balance c/d Cash in hand | 4,300 |
| To Interest received on Fixed Deposit | 500 | | |
| To Sale of furniture (1.4.2018) (Book value ₹ 25,000) | 22,500 | | |
| | 77,000 | | 77,000 |

**Additional Information :**

(i) Capital Fund as on 1st April 2018, was ₹ 63,200.

(ii) At the beginning of the year, the club possessed books worth ₹ 20,000 and furniture worth ₹ 40,000.

(iii) Subscription received in advance during the current year amounted to ₹ 1,000.

Prepare Income and Expenditure account of the Club for the year ending 31st March, 2019 and the Balance Sheet as on that date.

**OR**

[ திருப்புக / Turn over

https://www.tamilnaduboard.com

(b) From the following particulars of Siva Ltd., prepare common size income statement for the years ended 31st March 2016 and 31st March 2017.

| Particulars | 2015-16 | 2016-17 |
|---|---|---|
| | ₹ | ₹ |
| Revenue from operations | 2,00,000 | 3,00,000 |
| Other income | 25,000 | 75,000 |
| Expenses | 2,50,000 | 1,50,000 |
| Income tax | 40% | 40% |

**44.** (அ) தினேஷ் மற்றும் சுகுமார் 2018 ஜனவரி 1 அன்று கூட்டாண்மை ஒப்பந்தத்தில் ஈடுபட்டனர். தினேஷ் ₹ 5,00,000 மற்றும் சுகுமார் ₹ 4,00,000 முதலாகக் கொண்டு வந்தனர். ஒப்பந்தம் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது :

(i) தினேஷ் மற்றும் சுகுமார் இலாப நட்டங்களை 2 : 1 என்ற விகிதத்தில் பகிர வேண்டும்.

(ii) கூட்டாளிகளுக்கு முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% தரப்பட வேண்டும்.

(iii) எடுப்புகள் மீதான வட்டி கணக்கிடப்பட வேண்டியது தினேஷ் ₹ 3,600 மற்றும் சுகுமார் ₹ 2,300.

(iv) தினேஷிற்கு சம்பளம் ஆண்டுக்கு ₹ 62,000 வழங்கப்பட வேண்டும். மற்றும்

(v) சுகுமாருக்கு, அக்கழிவை கழித்த பின் உள்ள நிகர லாபத்தில் 10% கழிவு தரப்பட வேண்டும்.

2018, டிசம்பர் 31 -ம் நாளோடு முடிவடையும் ஆண்டில், வட்டி, சம்பளம் மற்றும் கழிவு போன்றவற்றை சரிக்கட்டுவதற்கு முன் நிறுவனம் ஈட்டிய இலாபம் ₹ 1,20,000.

இலாப, நட்ட பகிர்வு கணக்கைத் தயாரிக்கவும்.

**அல்லது**

https://www.tamilnaduboard.com

(ஆ) பின்வரும் விவரங்களைக் கொண்டு, முல்லை வரையறு நிறுமத்தின் போக்கு சதவீதங்களைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ இலட்சங்களில் | | |
|---|---|---|---|
| | 2015 - 16 | 2016 - 17 | 2017 - 18 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 100 | 120 | 160 |
| இதர வருமானம் | 20 | 24 | 20 |
| செலவுகள் | 20 | 14 | 40 |
| வருமான வரி | 30% | 30% | 30% |

(a) Dinesh and Sugumar entered into partnership agreement on 1st January 2018, Dinesh contributing ₹ 5,00,000 and Sugumar ₹ 4,00,000 as capital.

The agreement provided that :

(i) Profits and losses to be shared in the ratio 2 : 1 as between Dinesh and Sugumar.

(ii) Partners to be entitled to interest on capital @ 6% p.a.

(iii) Interest on drawings to be charged :
Dinesh : ₹ 3,600 and Sugumar : ₹ 2,300.

(iv) Dinesh to receive a salary of ₹ 62,000 for the year, and

(v) Sugumar is to receive a commission of 10% on the net profit after charging such commission.

During the year ended on 31st December 2018, the firm made a profit of ₹ 1,20,000 before adjustment of interest, salary and commission.

Prepare the profit and loss appropriation account.

**OR**

[ திருப்புக / Turn over

https://www.tamilnaduboard.com

(b) From the following information, calculate trend percentages for Mullai Ltd.

| Particulars | ₹ in lakhs | | |
|---|---|---|---|
| | 2015 - 16 | 2016 - 17 | 2017 - 18 |
| Revenue from operations | 100 | 120 | 160 |
| Other income | 20 | 24 | 20 |
| Expenses | 20 | 14 | 40 |
| Income tax | 30% | 30% | 30% |

**45.** (அ) அமல், விமல் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 7 : 5 என்ற விகிதத்தில் இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2019, மார்ச் 31 அன்றைய அவர்களின் இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | | ₹ | சொத்துக்கள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் : | | | கட்டடம் | 80,000 |
| அமல் | 70,000 | | அறைகலன் | 20,000 |
| விமல் | 50,000 | 1,20,000 | சரக்கிருப்பு | 25,000 |
| பற்பல கடனீந்தோர் | | 30,000 | கடனாளிகள் | 30,000 |
| இலாப நட்ட க/கு | | 24,000 | வங்கி | 19,000 |
| | | 1,74,000 | | 1,74,000 |

1.4.2019 -ல் நிர்மல் புதிய கூட்டாளியாகச் சேருகிறார். அவர் ₹ 30,000 முதலுடன் எதிர்கால இலாபப் பங்கில் 1/3 விகிதத்தில், பின்வரும் சரிக்கட்டலுடன் கூட்டாளியாகிறார்.

(i) சரக்கிருப்பின் மதிப்பு ₹ 5,000 குறைக்கப்பட வேண்டும்.

(ii) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹ 3,000 உருவாக்கப்பட வேண்டும்.

(iii) கட்டடம் ₹ 20,000 மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும்.

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி சேர்க்கைக்குப் பின்பான கூட்டாளியின் முதல் கணக்கு தயார் செய்யவும்.

**அல்லது**

https://www.tamilnaduboard.com

(ஆ) பாரத் நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 1,00,000 பங்குகளை முகமதிப்பில் பொது மக்களுக்கு வெளியிட்டது. பங்குகள் மீதான பணம் செலுத்த வேண்டிய விவரங்கள் பின்வருமாறு :

| | |
|---|---|
| விண்ணப்பத்தின் போது பங்கொன்றிற்கு | ₹ 5 |
| ஒதுக்கீட்டின் போது பங்கொன்றிற்கு | ₹ 3 |
| முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது பங்கொன்றிற்கு | ₹ 2 |

1,20,000 பங்குகளுக்கு விண்ணப்பத் தொகை பெறப்பட்டது. கூடுதல் விண்ணப்பத் தொகை உடனடியாக திருப்பிச் செலுத்தப்பட்டது. மேற்கண்டவற்றை பதிவு செய்ய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(a) Amal and Vimal are partners in a firm sharing profits and losses in the ratio of 7 : 5. Their balance sheet as on 31st March, 2019 is as follows :

| Liabilities | | ₹ | Assets | ₹ |
|---|---|---|---|---|
| Capital accounts : | | | Land | 80,000 |
| Amal | 70,000 | | Furniture | 20,000 |
| Vimal | 50,000 | 1,20,000 | Stock | 25,000 |
| Sundry creditors | | 30,000 | Debtors | 30,000 |
| Profit and Loss A/c | | 24,000 | Bank | 19,000 |
| | | 1,74,000 | | 1,74,000 |

Nirmal is admitted as a new partner on 1.4.2019 by introducing a capital of ₹ 30,000 for 1/3 share in the future profit subject to the following adjustments :

(i) Stock to be depreciated by ₹ 5,000.

(ii) Provision for doubtful debts to be created for ₹ 3,000.

(iii) Land to be appreciated by ₹ 20,000.

Prepare Revaluation account and Capital accounts of partners after admission.

**OR**



https://www.tamilnaduboard.com

(b) Bharath Ltd. issued 1,00,000 equity shares of ₹ 10 each to the public at par. The details of the amount payable on the shares are as follows :

| | |
|---|---|
| On application | ₹ 5 per share |
| On allotment | ₹ 3 per share |
| On first and final call | ₹ 2 per share |

Application money was received for 1,20,000 shares. Excess application money was refunded immediately. Pass journal entries to record the above.

**46.** (அ) சார்லஸ், முத்து மற்றும் சேகர் என்ற கூட்டாளிகள் முறையே 3 : 4 : 2 என்ற விகிதத்தில் இலாபங்களைப் பகிர்ந்து கொண்டனர். 2018 டிசம்பர் 31 -ம் நாளைய அவர்களின் இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு :

| **பொறுப்புகள்** | | **₹** | **சொத்துக்கள்** | **₹** |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் : | | | அறைகலன் | 20,000 |
| சார்லஸ் | 30,000 | | சரக்கிருப்பு | 40,000 |
| முத்து | 40,000 | | கடனாளிகள் | 30,000 |
| சேகர் | 20,000 | 90,000 | வங்கி ரொக்கம் | 33,000 |
| பற்பல கடனீந்தோர் | | 33,000 | | |
| | | 1,23,000 | | 1,23,000 |

1.1.2019 அன்று பின்வரும் ஏற்பாடுகளின் படி சார்லஸ் கூட்டாண்மையிலிருந்து விலகினார். https://www.tamilnaduboard.com

(i) சரக்கிருப்பின் மதிப்பு 10% அதிகரிக்கப்பட வேண்டும்.

(ii) வாராக்கடன் மீது ₹ 1,300 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.

(iii) சார்லஸிற்கு உரிய தொகை உடனடியாகச் செலுத்தப்பட்டது.

மறுமதிப்பீட்டுக் கணக்கு, விலகலுக்குப் பின் உள்ள கூட்டாளிகளின் முதல் கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

**அல்லது**

https://www.tamilnaduboard.com

(ஆ) நவீன் நிறுமத்தின் பின்வரும் வணிக நடவடிக்கைகளிலிருந்து கணக்கிடவும் :

(i) மொத்த இலாப விகிதம்

(ii) இயக்க அடக்க விலை விகிதம்

(iii) இயக்க இலாப விகிதம்

**இலாப நட்ட அறிக்கை**

| | விவரம் | ₹ |
|---|---|---|
| I | விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 20,000 |
| II | இதர வருமானம் : | |
| | முதலீடு மூலம் வருவாய் | 200 |
| III | மொத்த வருவாய் (I + II) | 20,200 |
| IV | செலவுகள் : | |
| | கொள்முதல் செய்த சரக்குகள் | 17,000 |
| | சரக்கிருப்பு மாற்றம் | (–) 1,000 |
| | நிதிசார் செலவுகள் | 300 |
| | இதர செலவுகள் (நிர்வாகம் மற்றும் விற்பனை) | 2,400 |
| | மொத்த செலவுகள் | 18,700 |
| V | அவ்வாண்டிற்கான வரிக்கு முன்னர் உள்ள இலாபம் (III – IV) | 1,500 |

[ திருப்புக / Turn over

https://www.tamilnaduboard.com

(a) Charles, Muthu and Sekar are partners, sharing profits in the ratio of 3 : 4 : 2. Their balance sheet as on 31st December, 2018 is as under :

| Liabilities | | ₹ | Assets | ₹ |
|---|---|---|---|---|
| Capital accounts : | | | Furniture | 20,000 |
| Charles | 30,000 | | Stock | 40,000 |
| Muthu | 40,000 | | Debtors | 30,000 |
| Sekar | 20,000 | 90,000 | Cash at bank | 33,000 |
| Sundry creditors | | 33,000 | | |
| | | 1,23,000 | | 1,23,000 |

On 1.1.2019, Charles retired from the partnership firm on the following arrangements :

(i) Stock to be appreciated by 10%.

(ii) To provide ₹ 1,300 for bad debts.

(iii) The final amount due to Charles was paid immediately.

Prepare revaluation account, partner's capital account and the balance sheet of the firm after retirement.

OR

https://www.tamilnaduboard.com

(b) From the following trading activities of Naveen Ltd., calculate :

(i) Gross Profit Ratio

(ii) Operating Cost Ratio

(iii) Operating Profit Ratio

**Statement of Profit and Loss**

| **Particulars** | ₹ |
|---|---|
| I Revenue from operations | 20,000 |
| II Other income : | |
| Income from investments | 200 |
| III Total revenues (I + II) | 20,200 |
| IV Expenses : | |
| Purchase of stock-in-trade | 17,000 |
| Changes in inventories | (–) 1,000 |
| Finance costs | 300 |
| Other expenses (administration and selling) | 2,400 |
| Total expenses | 18,700 |
| V Profit before tax (III – IV) | 1,500 |



https://www.tamilnaduboard.com

47. (அ) நிவேதா வரையறு நிறுமம் ₹ 10 மதிப்பிலான 1000 நேர்மைப் பங்குகளை, அழைப்புத் தொகை பங்கு ஒன்றிற்கு ₹ 4 வீதம் செலுத்தவில்லை என ஒறுப்பிழப்பு செய்தது. இதில் பங்கு ஒன்றிற்கு ₹ 7 வீதம் 800 பங்குகள் மறுவெளியீடு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

**அல்லது**

(ஆ) Tally.ERP 9 -ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளைக் குறிப்பிடவும்.

(a) Nivetha Ltd. forfeited 1000 equity shares of ₹ 10 each for non payment of call of ₹ 4 per share. Of these, 800 shares were re-issued @ ₹ 7 per share. Pass journal entries for forfeiture and re-issue.

**OR**

(b) Mention the commonly used voucher types in Tally.ERP 9.

-oOo-

**https://www.tamilnaduboard.com**
**Whatsapp @ 9300930012**
**Send your old paper & get 10/-**
**अपने पुराने पेपर्स भेजे और 10 रुपये पायें,**
**Paytm or Google Pay से**

https://www.tamilnaduboard.com